**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 87** **நாள் : 26.04.2024**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள், மணலி மண்டலத்திற்குட்பட்ட காமராஜர் சாலை மயானபூமியில் 250 நாட்டு மரக்கன்றுகள் நடும் பணியினைத் தொடங்கி வைத்து, மரக்கன்றினை நட்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மயானபூமிகளில் கட்டடங்கள் கட்டுதல் மற்றும் புனரமைப்புப் பணிகள், சுற்றுச்சுவர் அமைத்தல், குடிநீர் மற்றும் மின்வசதி, தகனமேடை அமைத்தல், நடைபாதைகள் அமைத்தல், பசுமையாகப் பராமரிக்கும் வகையில் மரக்கன்றுகள் நடுதல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி, மணலி மண்டலம், வார்டு-20க்குட்பட்ட காமராஜர் சாலை மயானபூமியில் ரூ.1.48 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேம்பாட்டுப் பணிகளை மாண்புமிகு மேயர் திருமதி ஆர். பிரியா அவர்கள் இன்று (26.04.2025) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மயானபூமியில் நீர்த்தொட்டி, குடிநீர் மற்றும் மின்வசதி, சுற்றுச்சுவர், வாகனம் நிறுத்துமிடம், காத்திருப்பு அறை, கான்கிரீட் சாலை, நடைபாதை உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள மயானபூமிகளில் பசுமையாகப் பராமரிக்கும் வகையில் நாட்டு மரக்கன்றுகளை நட்டு வளர்க்கும் விதமாக, மாண்புமிகு மேயர் அவர்கள், மணலி மண்டலம், காமராஜர் சாலை மயானபூமியில் சொட்டுநீர் பாசன வசதியுடன் கூடிய 250 நாட்டு மரக்கன்றுகள் நடும் பணியினைத் தொடங்கி வைத்து, மரக்கன்றினை நட்டார். இதில் மகிழம், புன்னை மற்றும் பூவரசு உள்ளிட்ட நாட்டு மரக்கன்றுகள் நட்டு பராமரிக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வின்போது, ஆணையாளர் திரு. ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப., வட்டார துணை ஆணையாளர்கள் திரு.கே.ஜெ.பிரவீன் குமார், இ.ஆ.ப., (மத்தியம்), திரு.எம்.பி.அமித், இ.ஆ.ப., (தெற்கு), நிலைக்குழுத் தலைவர் (பொது சுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, மண்டலக்குழுத் தலைவர் திரு.ஏ.வி.ஆறுமுகம், மாமன்ற உறுப்பினர்கள் **திருமதி ச. நந்தினி, திரு.ஆ. இராஜேந்திரன், திரு.ர. ஜெய்சங்கர், திரு.மு. ஸ்ரீதரன், திரு.க. காசிநாதன், திரு.ஆர்.ஜி. ராஜேஷ் சேகர், திரு.அ. தீர்த்தி** மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**